## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Judicial Magistrate No.I, Mayiladuthurai.

**CC.NO. 231/2024**

Deposition of Lw1 examined as PW1 Date: 25.10.2025

| | |
|---|---|
| Name | கிருஷ்ணமூர்த்தி |
| Father's/Husband's Name | வீராச்சாமி |
| Village | சின்னமேடு, தரங்கம்பாடி |
| Taluk | |
| Age | 59/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 25.10.2025

(A1 present. A3 absent. Petitoin U/s. 355 BNSS filed and allowed)

**முதல் விசாரணை தொடர்ச்சி**

நான் ஜெயங்கொண்டம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த கீழ்கண்ட அசல் ஆவணங்கள் தொலைந்து விட்டதால் நகல் ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். இந்தஆவணங்களை அசல் ஆவணங்களாக நீதிமன்றம் கருத்தில் கொள்ளவேண்டும். ( 1ம் எதிரி ஜெயராமனும் அவருடைய மனைவி 2ம் எதிரி விஜயகுமாரி என்ற கிருஷ்ணகுமாரியும் கீழ்கண்ட நபர்களின் பெயர்களையும் அவர்களுடைய ஐசிஐயின் வங்கியின் சேமிப்பு கணக்கு எண்களை கொடுத்து அந்த கணக்கு எண்களில் என்னை பணத்தினை டெபாசிட் செய்யச்சொன்னார்கள்.அதன் பேரில் 1வது நபர் லட்சுமிபதியின் ஐசிஐயின் சேமிப்பு கணக்கு எண்ணான 613201501938 என்ற எண்ணுள்ள அக்கவுண்ட் நம்பருக்கு 06.10.2006 ம் தேதி ரூ.30,000/- ஐ செலுத்தினேன். **(நான் மேற்கண்ட அக்கவுண்ட் நம்பருக்கு செலுத்திய தொகைக்கான ரசீது அ.சா.ஆ 19 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 2வது நபர் யுவன்சங்கர் என்பவரின் ஐசிஐயின் சேமிப்பு கணக்கு எண்ணிற்கு ரூ.36,000/- ஐ செலுத்தினேன். நா **(நான் மேற்கண்ட அக்கவுண்ட் நம்பருக்கு செலுத்திய தொகைக்கான ரசீது அ.சா.ஆ 20 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** 3 வது நபர் தனுஷ் முருகானந்தம் என்பவரின் ஐசிஐயின் சேமிப்பு கணக்கு எண்ணுக்கு ரூ.25,000/- ஐ செலுத்தினேன். **(நான் மேற்கண்ட அக்கவுண்ட் நம்பருக்கு செலுத்திய தொகைக்கான ரசீது அ.சா.ஆ 21 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 4 வது நபர் டல்ெஹசி என்பவரின் ஐசிஐயின் சேமிப்பு கணக்கு எண்ணுக்கு ரூ.30,000/- ஐ செலுத்தினேன். **(நான் மேற்கண்ட அக்கவுண்ட் நம்பருக்கு செலுத்திய தொகைக்கான ரசீது அ.சா.ஆ 22 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 5 வது நபர் பழனிசாமி என்பவரின் ஐசிஐயின் சேமிப்பு கணக்கு எண்ணுக்கு ரூ.20,000/- ஐயும் மற்றும் ரூ.10,000/- ஐயும் தனித்தனியாக செலுத்தினேன். **(நான் மேற்கண்ட அக்கவுண்ட் நம்பருக்கு செலுத்திய தொகைக்கான ரசீதுகள் அ.சா.ஆ 23 மற்றும் 24 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 6 வது நபர் கண்ணகி என்பவரின் ஐசிஐயின் சேமிப்பு கணக்கு எண்ணுக்கு ரூ.45,000/- ஐ செலுத்தினேன். **(நான் மேற்கண்ட அக்கவுண்ட் நம்பருக்கு செலுத்திய தொகைக்கான ரசீது அ.சா.ஆ 25 ஆக குறியீடு செய்யப்படுகிறது) .** (அ.சா.ஆ. 19 முதல் அ.சா.ஆ. 25 வரையிலான ஆவணங்கள் நகல்கள் என்பதால் எதிரிகள் தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபணைக்கு உட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது) நான் மேற்படி நபர்களுக்கு செலுத்திய தொகை ரூ. 2,06,000/- 1ம் எதிரியின் வங்கிக் கணக்கு எண்ணிற்கு செலுத்தியது ரூ. 7, 15,000/- ஆக மொத்தம் ரூ. 9,21,000/- ஐ த்தை வங்கிக் கணக்கில் செலுத்தினேன். மேலும் நான் எதிரிகளின் வீட்டிற்கும் , அவர்களது அலுவலகத்திற்கும் சென்று நேரடியாக அவர்களிடம் பல தவணைகளில் ரூ.12,15,000/- ஐத்தினை கொடுத்தேன். ஆக மொத்தம் நான் எதிரிகளுக்கு கொடுத்த பணம் ரூ.21,36,000/- ஆகும். மேலும் நான் வெளிநாடு அழைத்து செல்வதற்காக 11 நபர்களையும் கிண்டியில் ரூம் எடுத்து 25 நாட்கள் தங்கவைத்து அவர்களுக்கு உண்டான செலவுகள், அவர்களுக்கு மருத்துவ பரிசோதனை செய்த செலவுகள் மொத்தம் ரூ,3,10,000/- ஆகும், அதையும் எதிரிகள் பேச்சு

வார்த்தையின் போது தருவதாக ஒப்புக்கொண்டார்கள். மேற்படி 11 நபர்களுக்கும் எதிரிகள் சார்பில் செந்தில் என்பவர் என்னிடம் டிக்கெட் மற்றும் விசாவை கொடுத்தார். **(அதில் 8 நபர்களின் விசாக்கள் அ.சா.ஆ. 26 முதல் அ.சா.ஆ. 33 ஆக குறியீடு செய்யப்படுகிறது) .** டிக்கெட்டுகளை மேற்படி எதிரிகளே என்னிடம் இருந்து பெற்றுக்கொண்டார்கள்.மேற்படி 11 நபர்களையும் வெளிநாடு அனுப்பாமல் என்னிடம் இருந்து பெற்றுக்கொண்ட தொகையை தராமல் இருந்ததால் எதிரிகளிடம் பல்வேறு முறைகளில் கேட்டேன். அவ்வாறு நான் கேட்ட பொழுது எதிரிகள் அவர்கள் வீட்டில் வைத்து 2007 ம் ஆண்டு ஒரு சம்மத உடன்படிக்கையை சாட்சிகள் முன்னிலையில் எழுதிக்கொடுத்தார்கள். முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.